# மறுபடியும் போ



தலைப்பு: பதினோராவது கட்டளை

# மறுபடியும் போ

## GO YE UP AGAIN

## அத்தியாயம் 2

வில்லியம் பிரன்ஹாமின் ஊழியத்தில் நடந்த சில தனிச்சிறப்பு வாய்ந்த சம்பவங்களை குறித்ததான சில குறிப்புகளை அவ்வப்பொழுது நான் குறித்து வைத்துள்ளேன், அதை நான் இதை வாசிக்கின்ற அருமையானவர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சகோதரன் பிரன்ஹாம், ஒரு நான்கு மாத கால பிரயாணமாக உலகம் முழுவதுமாக செல்ல வேண்டியிருந்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்பதில் சந்தேக

மேயில்லை. அந்த நாடுகளின் சபைகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் இருதயப் பூர்வமாக இந்த பிரயாணத்தை வரவேற் கிறார்கள் என்று செய்தி வந்தது. ஹாலந்து, ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து தேசத்த வர்கள், கூட்டத்தில் கலந்து கொள்ள எத்தனித்திருந்த அநேக மக்கள் கலந்து கொள்வதற்கேற்ப 25000 பேர்கள் உட்காரக்கூடிய வசதியை கொண்ட அரங்குகளை ஆயத்தம் செய்தனர். ஐயர்லாந்து மன்னர் அரசு, தன்னுடைய அவையில் சகோதரனை வரவேற்க அதன் சொந்த வரவேற்பு குழுவை அனுப்பினது.

எந்த ஒரு சாதாரண மனிதனுக்கும் இந்த விதமான ஏற்பாடுகள், இந்த விதமான ஒரு தருணத்தைக் காட்டிலும் சிறந்த ஒன்றானது இருக்கவே இருக்காது. அவர் வழிகாட்டுகிறபடி மாத்திரமே செய்கிறார். ஆனால் சகோதரன் பிரன் ஹாம், இந்த தருணத்தில் செல்லக்கூடா தென்று தேவன் அவரை எச்சரித்தார். அவர்

செல்வதற்கென திட்டமிட்டிருந்த நகரங்களுக்கு மேலாக கறுத்த மேகங்கள் இருப்பதை தேவன் அவருக்கு வெளிப்படுத்தினார். அவரால் செல்ல முடியுமா என்று தன் அருமை நண்பர் களிடம் கூறுவது உண்மையாகவே அவருக்கு கடினமானதாக இருந்தது. தேவைகள் நிறைந்தவர்களாகிய தேவனுடைய மக்களுக்கு அதைக் கூறுவது அவருக்கு மிகக் கடினமாக இருந்தது. இருந்தாலும் அவர்களுக்கு அதைக் கூறிவிட்டு வீடு திரும்பினார். ஆனால் ஒரு விதத்தில் மகிழ்ச்சியற்ற நிலையில்தான் அவர் வீடு திரும்பினார். ஏனெனில் அவருடைய இருதயமானது வருத்தத்தால் கனத்திருந்தது. அநேகர் இதை புரிந்து கொள்ள மாட்டார்கள் என்றும், அநேகர் புண்பட்டு ஏமாற்றமடைந்திருப்பார்கள் என்றும் அவர் எண்ணினார். அதுதான் அவரை மிகவுமாக கவலைக்குள்ளாக்கியது. வானம் மற்றும் பூமி, துரைத்தனங்கள் மற்றும் அதிகாரங்

கள் அல்லது என்னவாயிருந்தாலும் அதற்கு மேலானது தேவனுடைய வழியே என்றும் அதுதான் சிறந்தது என்றும், தேவன் என்ன கூறுகின்றாரோ அதுதான் முடிவானது என்றும் நமது அருமை சகோதரன் பிரன்ஹாம் அறிந்திருந்தார். மனிதன் என்ன நினைத்தாலும் அல்லது கூறினாலும் சரி, அவர் தேவனுக்கு கீழ்ப் படிய வேண்டும்.

இந்த சில வார்த்தைகளில் இளைப்பாறு வதென்பது எப்படிப்பட்ட ஒரு கிருபை:

வீணாய் அவருடைய வழியை ஆராய்ந்து குருட்டு அவிசுவாசம் நிச்சய மாக தவறும்: தேவன் தான் தம்முடைய வார்த்தையின் வியாக்கியானி அவர் அதை வெளிப்படையாக்குவார்.

அந்த பொழுதானது எவ்வளவாக ஏமாற்றத்தை அளிப்பதாக இருந்தாலும், அல்லது அந்த மணி நேரமானது இருள் சூழ்ந்ததாக இருந்தாலும், கணப்பொழுதில்

தேவன் தோன்றும் போது எல்லாம் மாறிப் போகிறது என்பதை எந்த ஒரு மனிதனும் அறியமாட்டான். ஆகவே அது இங்கே இருந்தது. சில நாட்களுக்குள்ளாக ஒரு தொலைபேசி அழைப்பு சகோதரன் பிரன்ஹாமை அடைந்தது. அது கனடா தேசத்தைச் சார்ந்த அவருடைய அருமை நண்பர் சகோதரன் சாத்மேனின் அழைப் பாக இருந்தது, டாகோமா என்னுமிடத்தில் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப் பட்டிருக் கும் என அவர் நினைத்திருந்தார். அந்த நாளிலே பின்னர், டாகோமாவிலிருந்த பெத்தேல் ஆலயத்தின் மேய்ப்பரான ரெவரெண்ட் A.W. ராஸ்மூசன், சகோதரன் பிரன்ஹாமை தொலைப்பேசியில் அழைத் தார், இந்த முறை டாகோமாவிற்கு சகோதரன் பிரன்ஹாமை அழைத்து ஒரு கூட்டத்தை வைக்க வேண்டும் என்று அவருடைய இருதயத்தின் ஆழத்தில் இருந்தது.

இங்கே பயபக்தியுள்ள இரண்டு தேவனுடைய மனிதர் இருக்கின்றனர், ஒருவர் வேண்டுகோள் விடுக்கின்றார், மற்றவர் அழைப்பு விடுக்கின்றார்! ஆனால் எப்பொழுதும் போல கொடுப்பதை தேவன் தாமே செய்கிறவராக இருக்கிறார். ஆகவே அவர் பேச வேண்டும்! உலகம் முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கானவரிடம் ''முடியாது'' என்று கூறிவிட்டு, பிறகு மிகச் சிலருக்கு 'சரி'' என்று சகோதரன் எப்படி அவர்களிடம் கூறுவார்? அவர் தன்னுடைய வரம்புக்குள் என்ன கூறிட முடியும், நேர்மையாக எது என்று அவரால் கூற முடியும்? ஒரு வார்த்தை கூட இல்லை. ஆகவே சுத்தமுள்ள உண்மையைக் கொண்ட ஒரு நேர்மையான இருதயத்துக்கு ஒரு பதில் தேவைப்படுகிறதென்றால் தேவன் ஒன்றை வைத்திருக்கிறார் - தேவன் பேசுவதைக் கேட்பது - அவர் சகோதரன் பிரன்ஹாமிடம் பேசும் போது அவருடைய வார்த்தை களை

கேட்பது எவ்வளவு அற்புதமானது, எவ்வளவு மகத்தான ஒன்று.

'டாகோமாவுக்கு மறுபடியும் போ'' (Go ye up again to Tocama). வார்த்தையை பேசி உலகம் உண்டாகும்படிக்குச் செய்த அவர் தாமே, இந்த சிறிய வார்த்தைகளை அவர் பேச எப்படியா யிருந்திருக்கும். அது மிகவும் சுருக்கமாக தெளிவாக இருந்தது. எந்த ஒரு கட்டளையும் இல்லாமல் ; வெற்றியைக் குறித்து எதுவும் குறிப்பிடாமல், வழிகாட்ட எந்த ஒரு வார்த்தையும் இல்லாமல், எந்த ஒரு எடுத்துக்காட்டும் இல்லாமல் - ஆறு வார்த்தைகள் மாத்திரமே பேசப்பட்டது. (Go ye up again, to Tocoma) (ஆங்கிலத்தில் உள்ளபடியே - தமிழாக்கியோன்) முழுப் பிரயாண திட்டத்தையுமே தேவன் விவரித்துக் கூறுவார் என்று ஒருவர் நினைப்பதுண்டு. ஆனால் ஒவ்வொரு கட்டளைக்கும், எவ்வளவு எளிமையாக

பேசப்பட்டிருந்தாலும் சரி, ஊழியக்காரன் எடுத்துக் கொள்வதற்கென தேவன் பெருமளவான விசுவாசத்தை அளிக்கின்றார். எல்லையற்ற வல்லமை என்னும் வங்கியில் அவருடைய நாமத்தில் கணக்கிலடங்காத விதத்தில் நாம் எடுத்துக்கொள்ளலாம். தேவன் இந்த விதத்தில் பேசுகையில், விசுவாசத்தாலே நாம் அடிமேல் அடிவைத்துச் செல்கையில் தேவனுடைய திட்டத்தை வெளிக் கொணர்ந்து தெளிவாக நடப்பிக்கச் செய்கிறோம் என்று நான் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. நாம் நம்முடைய பங்கிற்கு அவரை விசுவாசித்து எளிய விசுவாசத்தில் நாம் செயல்படுவோமானால் தேவன் தம்முடைய உரைக்கப்பட்ட வார்த்தைகளை தெளிவாக்கினது போல அவருடைய முழு திட்டத்தையுமே தெளிவாக்கிக் காண்பிக்கிறார்.

டாகோமா, தொடர்ந்து ஜெபம் செய்து அவ்வப்போது உபவாசத்தில் இருந்ததால்,

தேவன் அதற்கு செவிகொடுத்தார். ஆவி யிலே அவர்களை புத்துணர்வாக்க, அவர்க ளுடைய வியாதிய ஸ்தரை சொஸ்தமாக்க, தம்முடைய சரீரமாகிய சபை பெருக, அவர் தம்முடைய ஊழியக்காரனின் உதடுகளின் மூலமாகத்தான் அதைச் செய்ய முடியும்.

டாகோமாவின் பரிசுத்தவான்கள் மத்தி யிலும், பல நகரங்களிலிருந்து வந்து இந்த மகத்தான கூட்டத்தில் பங்கெடுத்த மக்கள் மத்தியிலும், அருமையானகிறிஸ்துவின் ஆவி இருந்ததைக் குறித்து நான் பரவசப் பட்டேன். ஒவ்வொரு நாள் கூட்டத்திலும் 1 மணியிலிருந்து இரவு 10.30 மணி வரைக்கும் நான் இருந்தேன். கட்டிடத்தின் பின் பகுதியில் உள்ள புத்தகம் வைக்கும் இடத்தில் நான் உட்கார்ந்திருந்தேன். நான் ஒவ்வொரு நாளும் அங்கே கூடியிருந்த மக்களுடன் ஒன்பதரை மணி நேரம் உரையாடி, ஐக்கியங்கொண்டு, அவர்க ளுடைய கேள்விகளுக்கு நான் பதிலளித்

தேன். அவர்களில் ஒருவர் கூட.. அன்பில் லாதவர்களாயும் அல்லது அநீதியாயும் இல்லை. ஒவ்வொருவரும் தாழ்மையும் அன்புள்ளவர்களாயும், மகிழ்ச்சியுள்ளவர் களும், அமைதியுள்ள வர்களுமாக இருந் தார்கள். முழுக் கூட்டமும் ஆவியில் ஒற்றுமையும் விசுவாசமும் கலந்த ஒன்றாக இருந்தது. ஒருவரும் தனக்காக கவலைப் படவில்லை, ஆனால் தன்னுடைய சகோ தரனுக்காகவே எதையும் செய்தனர். விசித்திரமான அடையாளங்கள் அல்லது போலியான கிரியைகளைக் குறித்த எந்த ஒரு உபதேச சாட்சிகள் கூறப்படவே யில்லை. தேவன் உண்மையாகவே கூட்டத்தில் வாசம் செய்ய இறங்கி வந்தார். நான் கலந்து கொண்ட கூட்டங்களிலே மிகவும் ஒருமைப்பாடான கூட்டம் இது தான்.

ஆவியின் கனிகள் காணப்பட்டன, ஆவியின் வரங்கள் சபையோர் மத்தியில் கிரியை செய்தது - தீர்க்கதரிசனம்

உரைத்தல். அந்நியபாஷை, பாஷைக்கு அர்த்தம் உரைத்தல் மற்றும் அற்புதங்கள். இதைப் படிக்கும் அன்பானவரே கடந்த நான்கு வருடங்கள் தொடர்ந்து கூட்டங் களில் எவ்வளவாக நான் கேட்டிருக்கக் கூடும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் - பல்வேறு இடங்களில் பல்வேறு சமயங் களில் இப்படிப்பட்ட அநேக கிரியைகளை தேவனுடைய குமாரர் மற்றும் குமாரத் திகளின் மூலமாக நான் கேட்டும் கண்டும் இருக்கிறேன். ஆனால் அவை இப்படிப் பட்ட ஒரு பெருமதிப்புடனும் மரியாதை யுடனும், பரிசுத்த பயபக்தியுடனும் இந்த தீர்க்கதரிசனங்களும் வியாக்கியானத்துட னான அந்நிய பாஷைகளும் பெறப்பட் டதை நான் வேறெங்கும் கண்டதேயில்லை. ஓ, தேவன் தம்முடைய மக்களின் மத்தியில் பேசுகையில் அந்த முழுமை, அந்த அன்பு, அந்த ஆழம் எப்படிப்பட்டதாயுள்ளது! ஆகவே ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த

தீர்க்கதரிசனத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள எனக்கு வாஞ்சையாயுள்ளது.

சகோதரன் பிரன்ஹாம் அப்பொழுது தான் "நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம்'' என்ற பிரசங்கத்தை முடித்திருந்தார் - மக்கள் கூட்டம் மிக ஆழ்ந்த அமைதியில் இருந்தது - ஒருவரும் அசையவில்லை, காதோடு காதாய்ப் பேசும் சத்தம் கூட கேட்கப்படவில்லை. தேவன் பேச எத்தனிக்கும் போது ஒரு பரிசுத்த அமைதியை வரவிடுகிறார்! மிக மிருதுவாக பேசிக் கொண்டிருந்த சகோதரன் பிரன்ஹாமும் கூட திடீரென்று பேசுவதை நிறுத்தி விட்டார்! அப்பொழுது சடுதியாக கட்டிடத்தின் மாடியிலிருந்த வரிசையிலிருந்து ஒரு சத்தம் கேட்டது. ஒரு ஒலி பெருக்கி கருவி கூட தேவைப் படவில்லை - ஏனெனில் தேவன் ஒவ்வொரு செவியையும் திறந்தது போல காணப்பட்டது! காற்றலைகள் அங்கு இருந்து எல்லாருடைய செவிக்கும்

இருதயத்திற்கும் நேரடியாக கொண்டு சென்றது. என்னுடைய ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டபடி வார்த்தைக்கு வார்த்தை நான் அதை சரியாக மேற்கோள் காட்டட்டும்

'என் ஜனத்துக்கு கர்த்தராகிய நான் உரைக்கிறதாவது, நான் அனுப்பியுள்ள என் ஊழியக்காரனை, உங்களுக்கும், இந்த சந்ததிக்கும் நான் தான் அவனை உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன் என்று உங்களை உறுதிப்பாடாக நம்பச் செய்யும் படிக்கு பவுலைப் போல இவரும் தைரியமாக பேசுவார்''

''ஆம், நான் என் ஊழியக்காரன் பிரன்ஹாமை அனுப்பியுள்ளேன். அவ னுடைய வாயில் என்னுடைய வார்த்தை களை நான் வைத்திருக்கிறேன். நான் என் குமாரனை மரிக்கத்தக்கதாக அனுப்பி னேன், என் ஜனங்களோ அவரை புறக் கணித்தார்கள் - நானும் என்னுடைய

குமாரன் பிரன்ஹாமை அனுப்பியிருக் கிறேன், உங்களுடைய நாளிலே - உங்களிடம் அவர் வந்திருக்கிறார்''

'ஆம், அவர்கள் ஒன்று கூடியிருக்கின் றனர், அவர்கள் தங்களுடைய இரகசிய அறைகளிலே அவர்கள் சந்தித்துக் கொண் டனர். என் மக்களுடைய தலைவர்கள் ஒன்று சேர்ந்து ஆலோசித்து உள்ளனர். அவர் மீது அவர்கள் தீர்ப்பையும் செலுத்தி விட்டனர். அவர்கள் தங்கள் இரகசிய அறைகளிலே - நாம் அவரை புறக்கணிப் போம் - அவரில் ஒரு குறையை நாம் கண்டுபிடிப்போம், அதை நம் மக்களுக்கு போதிப்போம். இதுவும் கூட பெயல் செபூல் தான் என்று அவர்களிடம் கூறு வோம். ஆம், அவரை அனுப்பினது கர்த்தருடைய ஆவி அல்ல, என்று பேசியிருக் கிறார்கள்.''

ஆகவே உங்களிடம் அனுப்பியுள்ள என் ஊழியக்காரன் பிரன்ஹாமைக்

கொண்டு நான் அவர்களை நியாயந்தீர்ப் பேன்''

"ஏனெனில் என் ஆவியை என் ஊழியக்காரர்களுக்குள்ளாக வைப்பேன். நீங்கள் என் ஆவிக்கு கீழ்ப்படியவில்லை யெனில் நீங்கள் உடைக்கப்பட்டு போவீர் கள். அது உங்கள் மேல் விழுமானால், கர்த்தருடைய வார்த்தை உங்கள் மீது விழுமானால், நீங்கள் நசுங்கிப்போவீர்கள், உங்கள் வீடு பாழாகும்படிக்கு விடப்படும். இது தான் அந்த கல், ஆம் நீங்கள் அதன் மேல் விழுந்தால் நீங்கள் உடைந்து போவீர்கள். ஆனால் அது உங்கள் மீது விழுமானால் அது உங்களை தூளாக அரைத்து விடும்.''

''ஒன்றாகக் கூடியுள்ளவர்களுக்கு கர்த்தர் உரைக்கிறதாவது, என் ஆவியால் நிரப்பப்பட்டதாக தங்களை அழைத்துக் கொள் வோருக்கும் கர்த்தர் உரைக்கிற தாவது: நீங்கள் என் ஜனமாயிருந்தீர்கள் -

நான் உங்களை ஆசீர்வதித்தேன், நான் உங்களை அபிஷேகித்தேன், ஆனால் நீங்களோ ஒன்றாகக் கூடி, நான் உங்களுக்காக அனுப்பியுள்ள கர்த்தராகிய தேவனுடைய ஊழியக்காரனை புறக்கணித்தீர்கள். அவரை நான் அனுப்புகையிலும் நான் உங்களை நியாயந்தீர்ப்பேன், இந்த நாளிலும், இந்த மணி நேரத்திலும் உங்களுடைய வீடு பாழாக்கப்படும் - நீங்கள் ஒரு எழுப்புதலுக்காக கூவியழைப்பீர்கள். ஆனால் கர்த்தருடைய செவி உங்களுக்கு செவிகொடுக்காது, ஏனெனில் நான் உங்களை அழைத்த போது அது நான் தான் என்று நீங்கள் என்னை அறிந்து கொள்ளவில்லை. நான் உங்களோடு பேசும் போது நீங்கள் எனக்கு ஒரு அந்நிய ஜனங்களாக இருப்பீர்கள். நான் நின்று பிசாசுகளை துரத்தி, வியாதியஸ்தரை சொஸ்தமாக்கி, அப்பத்தைப்பிட்டு உங்கள் கண்களுக்கு முன்பாக அதை பெருகச் செய்த போதிலும், நீங்கள் இவன் பிசாசு

பிடித்தவன் என்று கூறின என் ஜனங்களைப் போல நீங்களும் ஆனீர்கள்''

'ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக் கடவன், ஏனெனில் நான் உங்களிடம் பேசுகிறேன். நான் உங்களிடம் என் ஊழியக்காரர்களை அனுப்புவேன். அவர் கள் உங்களை ஆசீர்வதிப்பார்கள், நீங்கள் என்னிடமாக சேர்க்கப்படுவீர்கள். இது வரை இல்லாத அளவிற்கு நீங்கள் பலமாய் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். மனிதருடைய சிந்தைகளையும், மனிதருடைய வழிகளை யும் உங்களிடமிருந்து அகற்றிப்போட்டு கர்த்தரிடத்திற்கு திரும்புங்கள்.''

இந்த மகத்தான தீர்க்கதரிசனமே எல்லா வற்றையும் உரைக்கிறது! இதை ஆராயும் காரியத்தை நான் உங்களிடம் விட்டுவிடும் நேரமாயுள்ளது. தேவன் நம்மிடம் தீர்க்கதரிசனத்தின் மூலமாக பேசுகிறார், இப்பொழுது இருக்கும் ஆபத்தைக்

குறித்தும் வரவிருக்கும் ஆபத்தைக் குறித்தும் அவர் நம்மை எச்சரிக்கிறார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இப்பொழுது மற்றுமொரு வரமாகிய அந்நிய பாஷை மற்றும் வியாக்கியா னத்தின் மூலமாக வந்த இன்னும் ஒரு தேவனுடைய செய்தியை நான் உங்க ளுக்குக் கூறட்டும்.

நான் டாகோமாவிற்கு வந்த போது, கடந்த கூட்டத்திலிருந்து ஆரம்பித்த அநேக அக்கினிகள் இன்னுமாக பற்றியெரிந்து கொண்டிருந்ததை நான் கண்டேன் - களிமண்ணான பாண்டங்களில் தேவனை மகிமைப்படுத்தும்படியாக வெற்றியின் அக்கினிகள் எரிந்து கொண்டிருந்தது. நான் பேசிக் கொண்டிருக்கிற ஒரு குறிப்பிட்ட பாண்டமானது வாஷிங்டனிலுள்ள அபர்தீனில் 1313 ஹூட் தெருவைச்சார்ந்த திருமதி ஜான் லெவின் ஆகும். அவள் தன்

சொந்த வார்த்தைகளால் என்னிடமாக குறிப்பிட்ட இந்த சம்பவம் இதுவே.

1946 வருட கோடை காலத்தில் என் சரீரம் மிகவும் பெரியதாகி, என் நண்பர்களும் எனக்குத் தெரிந்தவர்களும் நான் மறுபடியுமாக தாயாகப் போகின்றேன் என்று நினைத்திருந்தார்கள். நான் எங்களுடைய மருத்துவரிடம் சென்றேன். அவர் ஒன்றுமே கூறவில்லை. இரண்டு வாரங்கள் கழித்து பயங்கரமான இரத்தப் போக்கு எனக்கு நேரிட்டது. நான் மருத்துவரிடம் மறுபடியுமாகச் சென்றேன், அவர் சோதித்துப் பார்த்ததில் ஒரு பெரிய கட்டி இருந்தது தெரியவந்தது. உடனடியாக நானும் பரிசுத்தவான் களுமாக ஜெபித் தோம். ஆனால் படிப்படியாக அது மோச மாகிக் கொண்டேயிருந்தது. கடைசியாக மருத்துவர் என்னிடம் நான் புற்றுநோயால் அழிந்துக் கொண்டிருக்கிறேன் என்றும், என் சரீரத்தை புற்று நோய் மிக மோசமாக அரித்து விட்டது என்றும் கூறினார்.

"ஓரிகானிலுள்ள போர்ட்லாண்டிற்கு வரவிருந்த சகோதரன் பிரன்ஹாமைக் குறித்து ஒரு நண்பர் என்னிடம் கூறினார். நான் அங்கு செல்ல ஒரு வழியை தேவன் ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள் பதறுலுடன் ஜெபித்தோம், அவரும் வழியை ஏற்படுத்திக் கொடுத்தார். அந்த மதிய வேளையில் எனக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. எனக்கு புற்று நோய் உள்ளது என்றும் இன்னும் 72 மணி நேரத்தில் அது என்னை விட்டு கடந்து சென்று விடும்' என்றும் சகோதரன் பிரன்ஹாம் என்னிடம் கூறினார். அடுத்த நாள் ஆராதனையின் போது எனக்கு உடல் நலமில்லாமல் போயிற்று. என்னுடைய அறைக்கு நான் சென்ற போது இன்னுமாக என் உடல் நலம் பாதிக்கப்பட்டது. அப்பொழுது என்னுடைய புற்று நோய் கடந்தது, அது கடந்து சென்ற போது அதனுடைய துர்நாற்றம் சகிக்க முடியாத அளவிற்கு இருந்தது

"என் வயிறு அநேக மாதங்களாக பெரியதாகவே இருந்தது. பிறகு ஒரு நாள் காலை அது வழக்கம் போல சாதாரணமாக ஆனது. சில மாதங்களுக்கு முன்பாக மருத்துவரிடம் ஒரு பரிசோதனைக்காகச் சென்றிந்தேன், அவரும் சோதித்து புற்று நோய்க்கான ஒரு சிறு அறிகுறியும் என் சரீரத்தில் இல்லை என கூறினார். இன்று நான் சுகமடைந்த நிலையில் உள்ளேன்! எனக்கு ஜெபம் ஏறெடுக்கப்பட்டு பதி னொறு ஆண்டுகள் ஆகிறது. என்னுடைய சொஸ்த மாகுதலுக்கும், தேவனுடைய உண்மையான ஒரு ஊழியக்காரனா யிருக்கும் சகோதரன் பிரன்ஹாமின் அன்பு மற்றும் உண்மைத் தனத்திற்கும் நான் மிகவும் நன்றியுள்ளவளாக இருக்கிறேன்''

இந்த திருமதி. லெவினின் சாட்சியில் நாம் தெரிந்து கொள்ளும் ஒரு காரியம் என்னவென்றால் அவர்களுடைய சுகமடை தல் எந்த விதத்தில் நடந்தது என்பது தான். அது ஒரு அற்புதமாக இருந்திருக்கு

மென்றால் அவள் உடனடியாக முழுவது மாக சரியாக்கப்பட்டிருப்பாள், ஆனால் அவளுடைய சுகமாகுதல் ஒரு குறிப்பிட்ட காலத்தை எடுத்துக்கொண்டது. அவளு டைய புற்றுநோய் 72 மணி நேரத்தில் கடந்து சென்றது என்பது உண்மைதான், ஆனால் அந்த உடைந்திருந்த தசைகளின் சுகம் மற்றும் அணுக்கள் திரும்ப வளர்தலானவைகள் ஒரு படிப்படியாக நிகழ்கின்ற ஒரு செயற்பாங்காகும். ஆனாலும் மரணத்தை நிறுத்தும் எந்த ஒரு ஜெபமும் ஒரு அற்புதம் என்றே ஒருவர் கூறக்கூடும், ஜீவனை மறுபடியுமாகக் கொண்டு வருவது என்பது ஒரு அற்புதத்தைக் காட்டிலும் குறைவான ஒன்றல்லவே! அற்புதம் என்பது ஒரு காரியமானது, உடனடியாக நடப்பதே என்றும், சொஸ்தமாகுதல் என்பது சரீர அணுக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு படிப்படியாக வளர்ந்து உருவாகுதல் என்றே நான் நம்புகிறேன். அழிந்து

மரித்துப் போயிருக்கின்ற சரீர அணுக்க ளும் சரீர தசைகளும் உடனடியாக சிருஷ்டிக்கப்பட்டு திரும்ப கொண்டு வரப்படுதலே ஒரு அற்புமாகும் என்பதை நாமெல்லாரும் அறிவோம். நான் என்ன கூறி வருகிறேன் என்பதற்கு உதாரணம் தருகிறேன். அது ஒன்பது வயதான ஒரு சிறிய இந்தியப் பையனைக் குறித்ததாகும். அவனுடைய பெயர் டோனி ஜேம்ஸ். வாஷிங்டனிலுள்ள, ஷெல்டனில், தபால் பெட்டி எண் 326, ரூட், இடத்தைச் சேர்ந்தவன்.

சிறு பையன் டோனி ஜேம்ஸ் கூட்டத்திற்கு முழுவதும் குருடான நிலையில் வந்திருந்தான். அவன் எட்டு மாதக் குழந்தையாக இருக்கையில் அவ னுடைய தொட்டிலிலிருந்து கீழே விழுந்த தால் அவனுடைய இரண்டு கண்களுக் குள்ளாக இரத்தம் உறைந்து போய் உறைகட்டி உண்டானது, பின்னர் ஒரு காம்பு போன்ற தசை வளர்ந்தது, முடிவாக

அநேக மருத்தவ முயற்சிகளுக்குப் பிறகு மருத்துவர்கள் நம்பிக்கை இழந்தனர், அவர்கள் டோனியின் தாயிடம், 'உன் மகன் மறுபடியும் பார்வையடையமாட் டான்! அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுங்கள். ஏனெனில் அவனு டைய காரியத்திற்கு நம்பிக்கைக்கு இடமேயில்லை'' என்று கூறினர். மேலும் ஒரு கண்ணில் சிறு ஒளி மாத்திரமே அவனுக்குத் தெரியுமென்றும் இன்னொரு கண் முற்றிலுமாக அழிந்து விட்டது என்றும் அவளிடம் அந்த மருத்துவர் கூறினார்.

ஆறு வயதில் டோனி பார்வையற்ற வர்களுக்கான வாஷிங்டன் அரசுப் பள்ளியில் சேர்ந்தான். அதே சமயத்தில் நமது சந்ததியில் ஒரு தீர்க்கதரிசி இருக்கிறார் என்பதைக் குறித்தும் அவருடைய பெயர் வில்லியம் பிரன்ஹாம் என்றும் டோனியின் தகப்பன் கேள்விப் பட்டார். இந்த மனிதனுடைய கரத்தைக்

கொண்டு தேவன் அநேக அற்புதங்களை யும் அநேக சுகமளிப்பு களையும் செய்திருக்கின்றார் என்றும் அவர் கேள் விப்பட்டார். இந்த நல்ல செய்திகளின் விவரங்களை இந்த தகப்பன் கேட்ட போது அவருடைய இருதயத்தில் நம்பிக்கை துளிர்விட்டது. சமயம் செல்லச் செல்ல தான் கண்டிராத இந்த தீர்க்கதரிசியின் பேரில் ஆழமான மரியாதையும் மன மகிழ்ச்சியையும் கொள்ள ஆரம்பித்தார். இந்த தீர்க்கதரிசியைக் குறித்த எல்லா செய்திகளையும் அவர் ஆர்வமாகக் கேட்டார். அவருடைய விசுவாசம் வளர ஆர்ம்பித்தது. அதே போல சிறு டோனியின் விசுவாசமும் வளர்ந்தது. ஒரு நாளிலே தேவன் அவன் பார்வையடைந்து காணும்படிக்குச் செய்வார் என்று இரு வரும் விசுவாசித்தனர்.

சகோதரன் பிரன்ஹாம் டாகோமாவிற்கு வருகிறார் என்ற விவரம் டோனியின் தந்தைக்குத் தெரிந்த போது தான் அங்கே

முதலாவதாக இருக்க வேண்டுமென்று அவர் இருதயத்தில் உறுதி கொண்டார். ஆகவே புதன்கிழமை மாலை, அந்த மகத்தான கூட்டங்களின் முதல் இரவு கூட்டத்தில் திரு. ஜேம்ஸ் மற்றும் அவருடைய குருடான மகனும் அங்கே இருந்தனர், முதல் வரிசையில் முதலாவதாக அவர்கள் இருந்தனர். ரெவரெண்ட் பிரன்ஹாமைக் குறித்து தாங்கள் கேள்விபட்டிருந்த எல்லா காரியமும் உண்மையாகவே இருந்தது. அது இப்பொழுது அவர்கள் கண்களுக்கு முன்பாக ஜீவிக்கின்ற சத்தியமாயிற்று தங்கள் இருதயங்கள் சந்தோஷத்தினால் நிறைந்தவர்களாக தாங்கள் கண்ட காரியங்களைக் குறித்து நல்ல செய்திகளுடன் தங்கள் வீட்டிற்கு விரைந்தனர்.

வியாழக்கிழமை இரவும் முதலில் இருந்தவர்களில் மத்தியில் டோனியும் அவனுடைய தந்தையும் இருந்தனர். இந்த முறை அவர்கள் டோனியின் தாயையும்

அவனுடைய பாட்டியையும் அழைத்து வந்திருந்தனர். வியாதியஸ்தர் எல்லாருக் காகவும் ஜெபிக்க வேண்டிய நேரம் வந்த போது எல்லாரும் மிக அமைதியாக இருந்தனர். சில விநாடிகளில் சகோதரன் பிரன்ஹாம் ஜனக்கூட்டத்திலிருந்து மக்களை அழைக்க ஆரம்பித்தார் - ஓ, அநேகர் அழைக்கப்பட்டனர், இன்னும் அநேகர் அழைக்கப் பட்டனர் ஏனெனில் மக்கள் மத்தியில் விசுவாசம் பலமாக இருந்தது. முடிவாக சகோதரன் பிரன் ஹாமின் பார்வை டோனியின் மேல் விழுந்தது. ஒரு ஆழ்ந்த அமைதி நிலவினது. டோனியின் தாயை அவர் நேரடியாக நோக்கிப்பார்த்து ''குருடா யிருக்கின்ற உங்கள் மகனை என்னிடமாகக் கொண்டு வாருங்கள்'' என்று கூறினார். உடனடியாக திருமதி. ஜேம்ஸ் டோனியை பிரசங்க மேடைக்கு கொண்டு வந்தார். சகோதரன் பிரன்ஹாமுக்கு முன்பாக நின்று தன்னுடைய மகனை தீர்க்கதரிசியின்

கரத்தில் ஒப்புவித்தாள்! சகோதரன் பிரன்ஹாம் அந்த பையனை மிருதுவாக தன் மார்பில் அணைத்துக் கொண்டு மிகுந்த பயபக்தியுடன் ஜெபித்தார்.

உடனடியாக, இமைக்கும் நேரத்தில், டோனியின் கண்பார்வை திரும்ப வந்தது, இந்த சந்ததிக்கான தேவனுடைய தீர்க்கதரிசியை அந்த சிறிய டோனி தன்னுடைய சொந்த கண் களாலே கண்டான். அப்பொழுது சகோதரன் பிரன்ஹாம் நின்று அந்த தாயிடம் பேசினார், "நீங்கள் வலியினால் கஷ்டப்படுகிறீர்கள், மருத்துவர்களால் உங்களுக்கு உதவி செய்ய முடியாது ..... நீங்களும் கூட சுகமாக்கப்பட்டீர்கள்' என்று கூறினார். பிறகு அவர் டோனியின் தந்தையிடம் திரும்பி ''ஐயா நீங்களும் கூட சுகமானீர்கள்'' என்று கூறினார். அவர் மறுபடியுமாகத் திரும்பி டோனியின் பாட்டியை நோக்கி "உங்கள் விசுவாசம்

உங்களையும் கூட சுகமாக்கிற்று' என்று கூறினார்.

இந்த நேரத்தில் தேவனுடைய வல்லமையால் கூட்டமானது அசைந்தது. மக்கள் களிகூர்ந்து கொண்டிருந்தனர், அழுது கொண்டிருந்தனர், தேவனைத் துதித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது தேவனுடைய சுகமாக்கும் வல்லமை மகத்தான அலைகள் போல மக்கள் மீது இறங்கினது. கட்டிடத்தின் பின்புறத்தில் நான் நின்று கொண்டிருந்தேன், கண்ணீர் என் முகத்தில் வழிந்து கொண்டிருந்தது. அருமை கர்த்தாவே, அருமை கர்த்தாவே 'ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்' என்று எழுதியிருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை'' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டதை நான் நினைவு கூருகிறேன்.

குருடான நிலையிலிருந்து முழுப் பார்வையடைதல் - உண்மையாகவே அது ஒரு அற்புதமே. ஆனாலும் ஒரு நபர்

சந்தேகம் கொண்டார். திருமதி. ஜேம்ஸின் நெருங்கிய நண்பர் இவர்களிடம் வந்து, ''இது இப்படியாக இருக்க முடியாது. ஏதோ முன்னேற்பாடாக இதை நீ செய்தாய்'' என்றார். திருமதி. ஜேம்ஸ் தன் சிநேகிதியை கண்டித்து, "என் மகனின் கண்களைப் பார்'' என்றார்கள். அந்த நம்பிக்கையில்லாத நண்பர் டோனியின் கண்களை உற்றுப்பார்த்து தேவன் செய்ததை மறுக்க முடியாதவராக திரும்பிச் சென்றார். அந்த மாலை வீட்டிற்கு திரும்பிச் செல்லும் வழியில் அன்று நடந்த நிகழ்வுகளை மனதில் திரும்பவுமாக நினைத்துப் பார்த்தார்கள். நடந்த ல்லாவற்றையும் அவர்களாலே தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. அவர்கள் சந்தேகங்கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பொழுது தேவன் இருதயத்தில் பேசினார், ''சந்தேகம் கொள்ள வேண்டாம் இல்லையென்றால் சுகமளிப்பு இழக்கப்பட்டு விடும்,

விசுவாசி,'' என்றார். அடுத்த மாலை கூட்டத்தில் இந்த அற்புதமான வியாக்கியானம் அளிக்கப்பட்டது. அப்பொழுது திருமதி. ஜேம்ஸ் அதன் மதிப்பை உண்மையாகவே உணர்ந்து கொண்டார்கள்.

மக்களுக்கு கர்த்தருடைய ஆவியானவர் கூறுவதைக் கேளுங்கள் ... "உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே கூட இருப்பேன் என்று நான் உங்களுக்கு வாக்குத்தத்தம் செய்யவில்லையா? ஊழியத்தை தொடருகின்ற அற்புதங்கள் மற்றும் அடையாளங்களுடன் என் வார்த்தையை நான் உறுதிப்படுத்துவேன் என்று நான் உங்களுக்கு வாக்குரைத்திருக்கிறேன் அல்லவா? மக்களே நான் உங்களுக்கு கூறுகிறேன், நீங்கள் உங்கள் இருதயங் களை உயர்த்தி விசுவாசிக்க மாத்திரம் செய்தால் என் வாக்குத்தத்தம் உங்களிடம் வாக்குத்தத்தம் செய்திருக்கிற மகிமையை நீங்கள் காண்பீர்கள். செய்ய வேண்டுமென்று

பிதாவானவர் கட்டளையிட்டிருக்கின்ற காரியத்தை முன்சென்று செய்வது என்னுடைய ஆவியேயாகும். என் ஜனங்களே நான் கூறுகிறேன், என்னை நோக்கிப் பார்த்து இரட்சிக்கப்படுங்கள். என் ஜனமே, என்னை நோக்கிப் பார்த்து சொஸ்தமடையுங்கள் என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன்''

நண்பர்களே, இந்த வியாக்கியான மானது மிக வல்லமையாக இருந்ததால் அங்கு கூடியிருந்த பரிசுத்தவான்கள் பரிசுத்த அமைதியில் அதைப் பெற்றுக் கொண்டிருந்தனர். தேவன் பேசும் போது களைத்துப்போயுள்ள நம் இருதயங் களுக்கு அது எப்படிப்பட்ட பெலன் தருகிறது. அந்த வார்த்தைகளை அவர் பேசினதற்காக நான் மிகவும் மகிழ்ச்சி யுறுகிறேன் - ஏனெனில் நம் விசுவாசம் பெலவீனமானதாகவும், நம்முடைய பெலன் நலிந்ததாகவும் இருக்கிறது. ஆம்,

ஆனால் சோதனையில் நிற்கவைப்பது அவருடைய கிருபைதான்.

தேவன் பேசினார் என்றும், ஆகவே அவர்கள் எல்லாரும் விசுவாசிக்க வேண் டும் என்றும் அநேக மக்கள் அப்பொழுது உணர்ந்து கொண்டனர். தேவனுக்கு தேவையாயிருக்கின்ற ஒன்று விசுவாசித் தலே ஆகும் என்பதை அறிந்து கொண்ட வர்களில் திருமதி ஜேம்சும் ஒருவர்.

தேவனுடைய அற்புதமான ஆசீர்வா தங்கள் மறுபடியுமாக டாகோமாவில் பொழியப்பட்டது. 'நீ போ'' என்று தேவன் பேச ஒரு தீர்க்கதரிசி கேட்பது, ஓ. தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியை நம் சந்ததி கொண்டிருக்கிறது என்பதை அறிவது எப்படிப்பட்ட ஒன்று! தேவன் தம்மைத் தாமே நம் மத்தியில் அன்பி னாலே வெளிப்படுத்தி விசுவாசத்தின் ஒற்றுமைக்கு நம்மைக் கொண்டு வருவ தைக் காண்பதில் உண்மையாகவே

நாமெல்லாருமே களிகூருகிறோம். தேவன் தம்முடைய ஊழியக்காரனுடன் பேசி ஒரு நகரத்துக்கு அனுப்புகையில் நான் என்ன எதிர்ப்பார்க்க வேண்டும் என்பதை முழுவதுமாக அறிந்து கொண்டேன் என்று நான் விசுவாசிக்கிறேன் - பரலோகத் திலிருந்து பேசப்படுவதைக் கேட்க வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பு.

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். இது எவ்வளவு உண்மையானதாயிருக்கிறது. மருத்துவ ஞானமானது எதுவுமே செய்ய முடியாதபோது, தேவன் சுகமாக்கினார் என்று வியாதிப்பட்டுள்ள அல்லது வேத னையிலுள்ளவர்களுக்கு நான் சொல்வதை ஒரு சிலாக்கியமாகக் கருதுகிறேன். தேவ னுக்கு ஸ்தோத்திரம்! மனிதனுடைய கடு மையான சிக்கல் தேவனுக்கு செயல் படுகின்ற தருணங்களே.

1952 லிருந்து எனக்கு தலைவலிகள் வரத் துவங்கின. காலம் கடந்து செல்லச் செல்ல அவை அடிக்கடி வர ஆரம்பித்தது, சிறிது நேரத்திற்கு கண்கள் எந்த ஒரு எச்சரிக்கையின்றி இருளடைந்த நிலையில் ஆகிவிடும். மன உறுதி என்னை விட்டகன்றது. இன்னும் அதிகதிகமான தலைவலிகள் எனக்கு வந்து நான் அவதியுற்றேன். இந்த காலக் கட்டத்தில் எங்கள் குடும்ப மருத்துவரை அடிக்கடி சென்று ஆலோசித்தேன். ஒரு கண் மருத்துவரை சந்தித்து என் கண்களை முழுவதுமாக பரிசோதித்துப் பார்க்க வேண்டுமென அவர் ஆலோசனை அளித்தார். பரிசோதனையும் செய்யப்பட்டது, என் கண்களுக்கும் என் தலைவலிக்கு தொடர்பு இருக்கிறதா என்பதை கண் மருத்துவரால், கண்டுபிடிக்கவே முடியவில்லை. நான் ஒரு நல்ல மருத்துவமனைக்குச் சென்று ஒரு முழு உடல் பரிசோதனையை செய்து பார்க்க

வேண்டுமென்று எங்கள் மருத்துவர் அநேக முறைகள் ஆலோசனை வழங்கி னார். முடிவாக 1954, ஜூலை மாதம், என் காரியத்தில் அவர் ஒன்றுமே செய்ய முடியவில்லை, என்றும் மின்னசோட்டாவி லுள்ள ரோச் செஸ்டரில், மேயோ மருத்துவ மனைக்கு நான் செல்ல வேண்டு மென்றும் வற்புறுத்தினார். நான் முழுவது மாக களைத்துப் போய்விட்டேன், கண்கள் இருளடைதல் அடிக்கடி நேர்ந்தது. கண்கள் இருண்டு போதல் மற்றும் பார்வைக் குறைவால் எங்கள் காரை ஓட்டுவதை நான் விடவேண்டியதானது. என் நேரத்தில் அநே கமானது படுக்கையில் செலவழிக்கப் பட்டது. ஆனால் நான் ஓய்வெடுக்கவே முடியாது.

முடிவாக நான் 1954 அக்டோபர் மாதத்தில் மிச்சிகனிலுள்ள, டூ, என்னுமிடத் தில் போர் நினைவு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கே எட்டு நாட்கள் தங்கி உடல் முழுவதுமாக பரிசோதனை மேற்

கொண்டேன். அந்த மருத்துவமனையிலிருந்து மருத்துவரை நீண்ட வருடங்களாக நானறிவேன், அவருடைய திறமையின் மீது எனக்கு நம்பிக்கையும் மரியாதையும் உண்டு. அவர் மருத்துவமனையிலிருந்து என்னை அனுப்பினபோது, நோயா ளியின் புறக்குறிகளின் வாயிலாக நோயைக் கண்டு பிடிக்க ஒரு தனியார் மருத்துவமனைக்கு நான் செல்ல வேண்டுமென்று ஆலோசனை வழங்கினார். அலட்சியமாக இருந்து விடக்கூடாது என்று அவர் கூறினார்.

1954, டிசம்பரில் மேயோ மருத்துவ மனைக்குச் செல்ல நான் ஒப்புக்கொண் டேன். ஒரு தேதி குறிக்கப்பட்டது. அங்கே பல பரிசோதனைகள் மற்றும் ஆய்வுகளுக் குள்ளாக இரண்டு வாரங் களுக்கு உட்படுத்தப்பட்டேன். முடிவாக மருத்துவ விஞ்ஞான துறை பகுதியில் பரிசோதனை கள் நடைபெற்றன, மூளை பரிசோதனை ஒன்று நடத்தப்பட்டது, இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து, அவர்கள் என்னை

மறுபடியும் மருத்துவ விஞ்ஞான கட்டிடத் திற்கு அனுப்பி, அங்கே மெட்ராசேல் என்னும் மருந்தைச் செலுத்தி அந்த பரிசோதனையை மேற் கொண்டார்கள். முடிவாக என் மூளையில் ஒரு சதை வளர்ச்சி ஏற்பட்டு அதனால் என் கண்கள் இருளடைந்து விடுகிறது என்று மருத்துவ ரீதியாக அவர்கள் கருத்து தெரி வித்தனர்.

வியாதியுடனும் மனச்சோர்வுடனும் நான் வீடு திரும்பி னேன். வேதாகமம் நாட்களில் அதே போன்று இயேசு கிறிஸ்து சுகமாக்கினார் என்று நான் அடிக்கடி கூறினதைக் கேட்டுக் கொண்டிருந்த என் கணவர், என் சுகத்திற்காக தேவனை விசுவாசி என்று சவாலிட்டார். தெய்வீக சுகமளித்தலை போதித்த ஒரு சபைக்கு அவர் சென்றதே கிடையாது. ஆனால் எல்லா காரியத் திற்கும் தேவனை நம்பின என் நண்பர்களைக் குறித்து அநேக முறை நான் அவரிடம் கூறியிருக்கிறேன். என் சுகமளிப்புக்காக தேவனை விசவாசிக்க

அவர் ஆயத்தமாயிருந்தார். ஒரு கூட்டம் எங்கே நடக்கிறதென்று கண்டுபிடித்தால் அங்கே என்னை அழைத்துச் செல்வதாக அவர் என்னிடம் கூறியிருந்தார். வியாதி யஸ்தருக்காக ஜெபம் செய்யும் ரெவ ரெண்ட் வில்லியம் மரியன் பிரன்ஹாம் என்னும் பெயர் கொண்ட ஊழியக்காரரைக் குறித்து அடிக்கடி என்னிடம் பிறர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். 1955, ஜனவரி 12ஆம் தேதி சிக்காகோவிலுள்ள பிலதெல் பியா சபையில் அவர் கூட்டம் நடத்த உள்ளார் என்று நாங்கள் அறிந்து கொண்டோம்.

அக்கூட்டங்களுக்கு நான் செல்ல தேவன் என் ஜீவனை காப்பாரென்றால், கலிபோர்னியாவிலிருந்து என் சகோ தரனும் அவருடைய மனைவியும் எங்க ளுக்கு உதவ, ஊக்கப்படுத்த வந்திருந் தனர். இங்கே ஒரு அருமையான தேவ னுடைய பரிசுத்தவாட்டி வசித்துக் கொண் டிருந்தார்கள், அவர்களுடைய கணவர்

மெக்கினாக் ஜலசந்தியில் கட்டப்படும் பாலத்தை மேற்பார்வை பார்த்து கொண் டிருந்தார். அவர்கள் டென்னிஸியிலுள்ள மெம்பிசை சார்ந்த திருமதி. ஜே. ஏ. ஹைடவர். புற்று நோயால் பீடிக்கப் பட்டிருந்த அவர்கள் சுகமாக்கப்பட்டார் கள். ஆகவே அனுபவத் தினூடாக அவர்களால் பேச முடிந்தது. அவர்கள் என் பேரில் தனி அக்கரைக் கொண்டு எனக்காக ஜெபித்து, தேவனை நம்ப என்னை ஊக்குவித்தார்கள். என் நண்பர்கள் மூன்று அல்லது நான்கு பேர்கள் என் வீட்டிற்கு வந்து எனக்காக ஜெபிப்பார்கள், இப்படிப் பட்ட விலையேறப் பெற்ற வழியில் தேவன் எங்களை சந்திப்பார். ஜெப வீரர்களுக்காக எவ்வளவாக நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த சமயத்தில் ஒரு நாளைக்கு ஒரு பவுண்ட் என்ற விகிதத்தில் என் உடல் எடை குறைந்து கொண்டிருந்தது. சகோ தரன் பிரன்ஹாமால் சிக்காகோவில்

நடத்தப்படவிருந்த இரட்சிப்பு மற்றும் சுகமளிப்பு கூட்டங்களில் கலந்து கொள்ள, 1955 ஜனவரி மாதம் 10 ஆம் தேதியன்று எங்கள் வீட்டிலிருந்து புறப்பட் டோம். என் உடல் இருக்கின்ற நிலையில் அவ்வளவு தூரம் என் கணவர் என்னை அழைத்துச் செல்வது முட்டாள் தனமான ஒன்று என்று எங்கள் வீட்டிற்கு அருகாமையிலுள்ள வர்கள் நினைத்தனர். சிக்காகோவிலிருந்து 500 மைல்கள் தொலைவில் நாங்கள் வசிக் கிறோம். அங்கு சென்றடைய எங்களுக்கு இரண்டு நாள் பயணமாக இருந்தது. நாங்கள் சேருமிடத்தை அடைவதற்கு முன்னதாகவே மரணம் என்னை எடுத்து விடும் என்று நான் அநேக முறை நினைத்தேன்.

ஜனவரி 13ஆம் தேதி, காலை சுமார் பத்து மணிக்கு பிலதெல்பியா சபைக்கு வந்து சேர்ந்தோம். சகோதரன் பிரன்ஹாமைக் குறித்து என் உறவினர் விசாரித்தனர். மாலை ஆராதனை வரை

அவரை நாங்கள் காண முடியாது என்று எங்களிடம் கூறப்பட்டது. அந்த சபையின் வேதாகம பள்ளியில் இருந்த இரண்டு வாலிபர், நான் சபையிலுள்ள ஜெப அறைக்கு கொண்டு வரப்பட்டு மாலை ஆராதனை வரை நான் ஓய்வெடுக்க ஏதுவாக இருக்கும் என்று ஆலோசனை கூறினர். மத்திய வேளையில் கல்லூரியின் முதல்வர் அறைக்குள்ளே வந்து என் நிலைமையைக் கண்டு மாலை ஆராதனை வரை தேவன் என் ஜீவனைக் காக்க ஜெபம் செய்தார்.

ஆராதனை துவங்கினவுடன் பீடத்தின் பக்கத்தில் ஒரு கட்டிலில் என்னை படுக்க வைத்தார்கள். எனக்கு சுய நினைவு வரும் போது என் கணவரை இரட்சிக்கவும் என் சரீரத்தை சுகமாக்கவும் தேவனிடம் ஜெபித்தேன். நான் பாதி நினைவில் இருந்தது போலக் காணப்பட்டது. என் சரீரம் குளுமையாகவும் உணர்வு இழந்த நிலையில் இருந்ததை நான் உணர்ந்தேன்.

என் சரீர முழுவதும் சில்லென்று வியர் வையால் நனைந்திருந்தது.

சகோதரன் பிரன்ஹாம் செய்தியைப் பிரசங்கித்த பிறகு ஜெப வரிசையை அவர் அழைத்தார். அவர் ஜெப வரிசையிலிருந்த மக்களுக்காக ஜெபித்துக் கொண்டிருக்கை யில், தேவன் அவருக்கு ஒன்றை காண்பிக்க ஆரம்பித்தார். அவர் ஜனங்கள் பயபக்தியுடன் இருக்கும்படி கூறினார். 'ஒரு உயரமான கோபுரத்தைக் கொண்ட ஒரு பெரிய கட்டிடத்தை நான் காண் கிறேன். அது ஒரு நகரத்தில் உள்ளது, அந்த நகரம் ஒரு பள்ளத்தாக்கில் இருக்கின்றது. அது மின்னோசாட்டாவிலுள்ள ரோச்செஸ் டரில் மேயோ மருத்துவமனை ஆகும். ஒரு அருமையானவரால் ஒரு பெண் இந்த மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்படு வதை நான் காண்கிறேன். அவள் மிச்சிகானிலிருந்து வருகிறாள். இந்த மருத்தவமனையிலிருந்து அவள் வீட்டிற்கு அனுப்பப்பட்டாள். அவள் அழுத்தத்தை

விளைவிக்கிற ஒரு மூளை வியாதி உடையவளாக இருக்கிறாள்'' என்று அவர் கூறினார். சகோதரன் பிரன்ஹாம் கூட்டத்தை சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, கட்டிலில் இருந்த என்னைக் கண்டு தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, கட்டிலில் இருக்கிற சகோதரியே, அது நீ தான். எழுந்திருங்கள், உங்கள் படுக்கையை எடுத்துக் கொண்டு நடவுங்கள். இயேசு கிறிஸ்து உங்களை சுகமாக்கினார். வீடு செல்லுங்கள், நீங்கள் நலமாக இருக்கிறீர்கள், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக'' என்று கூறினார்.

பரிசுத்த ஆவியானவர் சகோதரன் பிரன்ஹாமின் மூலம் பேசின போது என் தலையின் மீது ஒரு கை வைக்கப்பட்டது போல நான் உணர்ந்தேன். நான் உணர்ந்த விதத்தை என்னால் விவரிக்க முடியவில்லை. அந்த தொடுதலை விவரிக்க வார்த்தைகளால் முடியாது. சுத்திகரிக்கும் அக்கினி என் தலையிலிருந்து பாதங்கள்

வரை சென்றது போல இருந்தது. தேவனுடைய பிரசன்னமும் வல்லமையும் என் மீது வந்தது, பெலன் என் சரீரத்தினூடாக சென்றது, நான் முழுவதுமாக சுகமாக்கப் பட்டேன். தேவன் எனக்கு பாராட்டின நன்மைக்காக எவ்வளவாக நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

அந்த இரவு என் கணவர் கர்த்தரை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார், அவர் எங்களை வீட்டிற்கு அழைத்துக் கொள்ளும் வரை அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்பதே எங்கள் வாஞ்சை.

நான் சுகமாக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இந்த சாட்சியை நான் எழுதுகிறேன், அதற்குப் பிறகு என் தலையில் எந்த விதமான ஒரு வலியும் இல்லை. அதற்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்த விரும்புகிறேன். இயேசு கிறிஸ்து என்னுடைய இரட்சகர், சுகமளிப்பவர்,

ஞானஸ்நானம் அளிப்பவர் மற்றும் நண்பர் என்று உண்மையாகவே என்னால் கூற முடியும். என்னு டைய எல்லாமும் அவரே. எல்லா காரியங்களையும் நலமாகச் செய்யும் தேவனை ஒருவர் நம்ப இந்த சாட்சி ஏதுவாக இருக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெபம் ஆகும்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதரி திருமதி. வெஸ்லி இவ்லெய் 890. எண். ஸ்டேட் தெரு, செய்ண்ட் இக்னேஸ் மிச்சிகான்...

